இருபத்தோராம் நூற்றாண்டில் பாரசீக மொழியில் எழுதப்பட்ட நாவல்களின் அறபு மொழிபெயர்ப்புக்கள்: "மஹ்மூத் தௌலத் ஆபாதியின் "தரீக் அத்தப்ஹ்" என்ற நாவலை மையப்படுத்திய ஒரு விவரணப் பகுப்பாய்வு

Arabic Translations of Persian Novels in the Twenty-First Century: A Descriptive Analytical Study based on Mahmud Dawlatabadi's Novel "Tariq al-Tabh"

Mohammed Thamby Habeebullah[1]
habeebullah@seu.ac.lk

Abstract

Translation has evolved significantly in the contemporary world, playing a crucial role in anthropology and facilitating the exchange of ideas across languages. It involves converting languages while maintaining their meaning and essence, and is a key component of applied linguistics, taught in Universities. The Arabic and Persian languages, among the oldest in their respective Semitic and Indo-European families, have maintained literary ties and translation traditions from ancient times to the present. In recent years, there has been an increase in the translation of Persian novels into Arabic, exemplified by the work 'Tariq Basmal Suthan' by Mahmoud Dawlat Abadi, which was translated into Arabic as 'Tariq al-Tabh' (The Killing Field) by Ahmed Moussa. This novel addresses the tragedies and hardships of the Iran-Iraq war (1980-1988) and has resonated with Arab readers, both locally and internationally, as a sociological work that emphasizes themes of humanity, peace, and brotherhood. The study of this translation explores the nature and trends of translating the novel from Persian to Arabic, the techniques used, and its impact on Arab readers. Utilizing a descriptive analysis method and secondary data, the researcher gathered opinions from Arab readers through various media to assess the novel's influence. Findings reveal significant similarities between Persian and Arabic in phonology, vocabulary, grammar, and literature, as well as parallels in translation quality and trends. The translated novel has notably influenced Arab-Persian societies, promoting unity, coexistence, and mutual understanding.

Keywords: *Arabic, novel, Persian, Mahmud Dawlat abadi, Translation*

[1] ***Senior Lecturer, Southeastern University of Sri Lanka,***

அறிமுகம்:

இன்றைய நவீன உலகில் தொழிநுட்பம், கண்டுபிடிப்புக்கள் மற்றும் அறிவியல் முன்னெடுப்புக்கள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இவ்வாறு அதிகரித்து வரும் மாற்றங்கள், அறிவியல் முனனேற்றஙகள் என்பன காணப்படுகின்ற போதிலும், சமூகங்களுக்கிடையேயான மோதல்கள், முரண்பாடுகள் உலகலாவிய ரீதியில் இன்று வரை தொடர்ந்தும் அதிகரித்த வண்ணமே உள்ளன. உலகில் காணப்படுகின்ற பல்கலைக்கழகங்கள், அறிவியல் நிலையங்கள், ஆய்வு மையங்கள் என்பன இத்தகைய பாரிய அறிவு முன்னேற்ற பாதையிலும் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் சிகரத்தை தொட்டிருப்பதை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது. மனிதர்களுக்கு பூரண கருத்து சுதந்திரம் வழங்கப்பட்டு சமூக இயங்கியலில் மாற்றங்கள் பல இடம்பெற்று வருகின்ற போதிலும், சமூகங்களுடையே புரிந்துணர்வின்மையும் முரண்பாடுகளும் இன்று வரை குறைந்தபாடில்லை என்றே கூறலாம். அதேவேளை, உலகளாவிய ரீதியில் ஏற்படடுள்ள இத்தகைய முரண்பாடுகளையும் மோதல்களையும் முடிவுக்கு கொண்டுவர பல்வேறு முயற்சிகள் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுதும் நோக்கப்படவேண்டியதாகும்.

நவீன காலப்பகுதியில் முரண்பாடுகளையும் மோதல்களையும் களையும் வகையில் சமூகங்களுககிடையிலான பொதுவான கலந்துரையாடல், புத்திஜீவிகளிடையே அறிவியல் கருத்தாடல்கள், சர்வதேச மாநாடுகள் என்பன இன்றுவரை இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். முரண்பாடுகளைக் களைந்து உடன்பாடுகளை எய்வதற்காக எழுதப்பட்ட முக்கிய ஆக்கங்களில் ஒன்றான அறிஞர் சாமுவேல் ஹேண்டிங்டன் எழுதிய "The Clash of Civilization and Remaking of world order *(நாகரிகங்களுக்கு இடையிலான மோதல்) என்ற நூல் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்த நூல் உலகிலுள்ள பல்வேறு மொழிகளுக்கு மொழிபெயர்ப்பு செயய்யப்படடிருப்பதும் குறிப்பிடததக்கதாகும். இதில் நூலாசிரியர் ஹெண்டிங்டன்; குறிப்பிடுகின்ற போது "உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் பல்வேறு முன்னேற்றங்கள், மாற்றங்களுக்கு மத்தியில் மோதல்கள் மற்றும் வெடிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக விளங்கிய போதிலும், அவற்றை ஓரளவேனும் தவிப்பதற்கு நாகரிகங்களுக்கு இடையிலான புரிதல் மற்றும் வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமை காணுதல், கருத்துக்களை மதித்து நடந்து கொள்ளுதல் என்பன முக்கியமானதாகும். முரண்பாடுகளுக்கான உண்மையான தீர்வு என்பது கலாச்சாரங்களில் புதைந்து போகுதல் அல்லது மாறாக நாகரீக சக்திகளை சமநிலைப்படுத்தி வெற்றி காண்பதில் தான் தங்கியுள்ளது என குறிப்பிடுகின்றார்.* (Samuel Huntingdon; 1996 p 321) *மகாத்மா காந்தி குறிப்பிடும் போது "முரண்பாடுகளை வன்முறையால் தீர்க்க முனைவதானது சமூகத்தை அது சிதைக்கும் நிலைக்கே இடடுச்செல்லும். நிலையான தீர்வு என்பது அமைதியான கருத்துபபரிமாறலிலே தங்கியுள்ளது."* (Gandhi Mahatma, 2005, All men are Brothers? p-81). *அறிஞர் பீட்டர் நியூமாரக் என்பவர் குறிப்பிடும் போது "மொழிபெயர்ப்பு சேவையானது, சமூகங்களிடையே நிலவும் கலாச்சார இடைவெளியை குறைக்க வல்லதாகும்."* (Newmark, 1988, A text book of Translation, p-7).

உண்மையில், பலதரப்பட்ட நாகரிகம், கலாச்சாரம் என்பவற்றுக்கிடையே உருவாகும் மோதல்களை தவிர்ப்பதற்கும், ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் சிறந்த மனப்பாங்குகளை

உருவாக்குவது இன்றியமையாத காலத்தின தேவையாகும். இந்த வகையில் பல்வேறு முரண்பாடுகளையும் மோதல்களையும தவிர்ப்பதில், மொழிபெயர்ப்புத் துறையானது, மிகப்பெரிய பங்களிப்பை புரிகிறது. ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் சமூகங்களுடையே வளர்ப்பதற்கு மொழிபெயர்ப்பு துறையானது பாரிய பங்களிப்புகளை செய்து வந்துள்ளது என்பதை வரலாற்று ரீதியாக நோக்குகின்ற பொழுது இதனை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

இந்த ஆய்வானது, பாரசீக மொழியிருந்து அரபு மொழிக்கு 21ஆம் நூற்றாண்டின் மொழிபெயர்ப்புச்செய்யப்பட்ட நாவல் இலக்கியங்கள் பற்றிய பின்புலங்களை விளக்குகிறது. பாரசீகததிலிருந்து நாவல்கள் அரபு மொழிக்கு அதிகமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளனவா? அவை எத்தகைய கருப்பொருட்களை மையப்படுத்தியதாக அமைநதுள்ளன? அவற்றின் மொழிபெயர்ப்பு போக்குகள், தன்மை, நுட்பங்கள் எந்த அளவில் காணப்படுகின்றன? "தரீக் அத்தப்ஹ்" என அரபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட மஹ்மூத் தௌலத் ஆபாதியின் நாவலின் பாத்திரம் எத்தகையது? அறபு சமூகத்திற்கு மத்தியில் அது ஏற்படுத்திய தாக்கங்கள் யாது? போன்ற கேள்விகளே ஆய்வு பிரச்சினைக்கான அடித்தளமாக அமைந்துள்ளன.

இந்த அடிப்படையில், இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. *அறபு மற்றும் பாரசீக மொழிகளுக்கிடையே காணப்படுகின்ற மொழிபெயர்ப்பு தொடர்பான முன்னெடுப்புக்களை மதிப்பீடு செய்தல்.*
2. *21ஆம் நூற்றாண்டில் பாரசீக மொழியில் எழுதப்பட்ட நாவல்களின் போக்குகள் அதன் நுட்பங்கள் என்பவற்றை அறிந்து கொள்ளுதல்.*
3. *மஹ்மூத் தௌலத் ஆபாதியின் "தரீக் அத்தப்ஹ்" என்ற நாவல் பற்றிய கருப்பொருள் அதன் பின்னணி, நுட்பங்கள் என்பன பற்றிய தெளிவினைப் பெறுதல்.*
4. *மஹ்மூத் தௌலத்தின் நாவல் அறபு சமூக மட்டத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்தல்.*

21ஆம் நூற்றாண்டில் பாரசீக மொழியில் பல்வேறு கருப்பொருள்களில் எழுதப்பட்ட பல நாவல்கள் அறபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டள்ளன, அவை அறபு பல்கலைக்கழகங்களிலும் நாவல் இலக்கிய துறையில் இன்றும் கற்பிக்கப்படுகின்றன. பாரசீக நாவல்கள் மாணவர்கள், ஆய்வாளர்களிடையே அமோக வரவேற்பையும் அவற்றின் கருப்பொருட்கள், நுட்பஙகள் என்பன ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அறிவுச்சஞ்சிகைகளில் பதிப்புச் செய்யக்கூடிய வகையிலும் காணப்படுகின்றன. இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்ட நாவல்கள் அனைத்தையும் இத்தலைப்பின் கீழ் ஆய்வுக்குட்படுத்தல் என்பது சிரமமான ஒரு முயற்சியாகவே அமையும்.

எனவே ஆய்வாளர் நவீன காலப்பகுதியில் எழுதப்பட்ட முக்கியமான நாவல்களில் மஹ்மூத் தௌலத்தினால் எழுதப்பட்ட "தரீக் பஸ்மல் சுதன்" என்ற நாவலின் அறபு மொழிபெயர்ப்பான " தரீக் அத்தப்ஹ்;" நாவலைத் தெரிவுசெய்துள்ளார். 1979 ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியை தொடர்ந்து, ஈரானுக்கும் அண்டை நாடான ஈராக்கிக்கும் இடையே 1980 களில் இருந்து 1988 வரை ஏறத்தாள 08 வருடங்கள் கடுமையான போர் முண்டன. இதனால் இரண்டு நாடுகளிலும்

அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டதுடன் குறிப்பாக ஈரானில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இந்த யுத்தத்தால் மரணம் அடைந்தனர். மனிதப் பேரவளங்களையும் பொருளாதார ரீதியான கஷ்டங்களையும் இடர்பாடுகளையும் மக்கள் அனுபவித்தனர். இத்தகைய பேரவலங்களை சித்தரிக்கின்ற வகையில் எழுதப்பட்ட ஒரு சிறிய நாவலே "தரீக் அத்தபஹ்" என்ற நாவலாகும். இதில் காணப்படும் மொழிபெயர்ப்பு நுட்பங்கள், அனுகுமுறைகள், சமகால சூழலில் வாசகர்கள் மத்தியில் அது ஏற்படுத்தி இருக்கின்ற தாக்கம், முக்கியத்துவம் என்பவற்றை இந்த ஆய்வு முன்வைக்கிறது. இந்த நாவல் வன்முறை, இடப்பெயர்வு, சுதந்திரம், தியாகம், மனிதநேயம், மனித பேரவலம், உளவியல் தாக்கம், வறுமை போன்ற பல்வேறு அம்சங்களை ஆராய்வதாக அமைந்துள்ளது. நாவலாசிரியர் மஹ்மூத் தௌலத் ஆபாதி நாவலர்களுக்கான சர்வதேச விருதை பெற்ற பிரசித்தி பெற்ற நாவல் துறை ஆளுமைகளுள் ஒருவதாகவும் உள்வாங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வு முறையில் :

இந்த ஆய்வு ஒரு விவரண தரம்சார் பகுப்பாய்வு முறையாகும். இந்த ஆய்வில் ஆய்வாளர் தகவல் சேகரிப்புக்காக இரண்டாம் நிலை தரவுகளை பயன்படுத்தியுள்ளார். இதில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நூல், நாவல்களின் தற்கால போக்குகள், கருப்பொருட்கள் மற்றும் நுட்பங்கள் பற்றியும் கருப்பொருளை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ள ஏனைய நூல்கள், நாவல்கள், ஆய்வு கட்டுரைகள் பற்றியும் குறிப்பாக ஆபாதியின் நாவல் தொடர்பாக சமூக வலைத்தளங்கள், சர்வதேச வலைப்பின்னல்கள், சஞ்சிகைகள், பருவ கால இதழ்கள் என்பவற்றில் இடம்பெற்ற ஆக்கங்களை மையப்படுத்தி ஆய்வாளர் தகவல்களைப் பெற்று தனது ஆய்வை முன்னெடுத்துள்ளார். மேலும் பாரசீக மொழிபெயர்ப்புகள், நாவல்கள் தொடர்பான ஆய்வு கட்டுரைகளை பற்றி அறபு வாசகர்கள் வழங்கிய கருத்துரைகள் தொடர்பான மதிப்பீட்டையும் இந்த ஆய்வில் ஆய்வாளர் முன்வைத்துள்ளமை அடையாளப்படுத்தப்படுத்தப்பட வேண்டிதயகும்.

இலக்கிய மீளாய்வு:

இலக்கிய மீளாய்வு தொடர்பாக நோக்கும் போது இந்த நாவலோடு தொடர்பான தலைப்புக்கள் தனியான ஆய்வுகளாகவோ, அல்லது பல்கலைக்கழக கற்கைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளாகவோ அல்லது முழுமையான விமர்சன ஆய்வாகவோ முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனினும் சில பத்திரிகைகளில் இந்த நாவல் தொடர்பான சில இலக்கிய விமர்சனங்கள், திறனாய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் எகிப்தில் இருந்து வெளிவரும் "அல் அய்யாம் " பத்திரிகையில் அஹ்மத் அலி என்பவர் இந்த நாவல் தொடர்பான இலக்கியத் திறனாய்வையும் மனிதநேய பண்புகளை சித்தரிக்கும் மாண்பையும் தனது கட்டுரையில் எடுத்துக்காட்டியுள்ளார். இந்த நாவல் போரையும் அது விட்டு செல்லும் பேரவலங்களுக்கும் எதிரான ஒரு அரைகூவலாகும். இங்கு தப்ஹ் (படுகொலை) என்ற கருத்து மனித துயரத்தின் அடையாளமாகவும் மற்றவர்களிடமிருந்து தன்னை அந்நியப்படுத்தலின் அடையாளமாகவும் மாறுகிறது என கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகிறார். (அல்அய்யாம் செய்தித்தாள், இதழ், பக்- 10 ,11) பொதுவாக 1980- 1988 காலப் பகுதிகளில் இடம்பெற்ற ஈரான் - ஈராக் யுத்தத்தின் அகோரங்களையும் மனித பேரழிவுகளையும் விளக்கும் போது இந்த

நாவிலிருந்து சில தரவுகள், உணர்வு அலைகள் எழுத்தாளர்களால் கையாளப்படுகின்றதே தவிர, ஆய்வு வடிவத்தில் வெளிவந்த தகவல்கள் மிக அரிதாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மொரோக்கோவைச் சேர்ந்த நாவலாசிரியர் முஹம்மது பர்ராதா என்பவரின் "லுஃபதுன் நிஸ்யான்" (1957) என்ற நாவல், கலாநிதி சுக்ரி என்பவரின் "அன்மாத் அர் ரிவாயா அல் ஜதீதா" (2008) என்ற நாவல் பற்றிய மதிப்பீடு போன்ற நூல்களையும் ஆய்வாளர் நவீன நாவல்களின் போக்குகள், மொழிபெயர்ப்பு நுட்பங்கள் என்பவற்றை அறிந்து கொள்ள முன்னைய ஆய்வுகளை பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடலும்:

1. ***மொழி பெயர்ப்புத் துறையும் அறபு பாரசீக மொழிபெயர்ப்புகள் தொடர்பான மதிபபீடும்:***

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியலுள்ள உரையை மற்றொரு மொழியிலிக்கு அதன் பொருள், நடை மற்றும் நோக்கத்தை பாதுகாத்து இன்னொரு மொழிக்கு மொழிமாற்றம் செய்வதையே மொழிபெயர்ப்பு அழைக்கப்படுகிறது. இது பொதுவாக மொழிபெயர்ப்பு அறிஞர்கள் வைக்கின்ற வரைவிலக்கணமாகும். மொழிபெயர்ப்புத் துறை மானிடவியல் மற்றும் பிரயோக மொழியியல் துறையில் மிக முக்கியமான ஒரு பகுதியாக நோக்கப்படுகிறது. எல்லோருக்கும் எல்லா மொழிகளையும் கற்றுக் கொள்ளுதல் , விளங்குதல் அல்லது அதில் புலமைத்துவம் பெறுதல் என்பது சிரமமான காரியம் என்பதனால் மொழிபெயர்ப்பின் ஊடாகவே இன்னொரு மொழியின் கலாச்சாரம், பாரம்பரியங்களை விளங்கிக் கொள்வதற்கு முடிகிறது. இந்த வகையில், பாரசீக - அரபு மொழிகளுக்கு இடையிலான மொழிபெயர்ப்புப் பணியானது சுவையானதும் ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை தொராக இடம்பெற்று வருகின்ற ஒரு ஒரு செயற்பாடாகவும் விளங்குகிறது. எனவே மொழிபெயர்ப்பின் அகலமான பொருளை புரிந்து கொள்வதற்கு மொழியியல் அறிஞர்கள் மொழிபெயர்ப்பு பற்றிய பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்.

இந்த வகையில், மத்திய கால அறிஞர்களில் ஒருவரான ஜாஹிஸ் (776 - 869) என்பவர் குறிப்பிடும் போது "மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுகின்ற மொழிபெயர்ப்பாளர் தான் மொழிபெயர்க்கும் மூல மொழியையும் மொழிபெயர்க்கவுள்ள இலக்கு மொழியையும் நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். அவர் எந்த மொழிபெயர்ப்பில் ஈடுபட்டாலும் மூலநூலின் ஆசிரியரை விடவும் அதிக அறிவு உள்ளவராக இருக்க வேண்டும்.(ஜாஹிஸ், 1949 அல்பயான் வத்தப்யீன், பாகம்,1, பக்கம்75-78)

*ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் சமூகங்களுடைய ஏற்படுத்துவதில் மொழிபெயர்ப்பு துறையானது பாரியளவு செல்வாக்கு செலுத்தி வருவதை நாம் கண்டுகொள்ள முடியும். இது பற்றி இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் இப்னு கல்தூன் **(732 - 808)** குறிப்பிடும்போது "மொழிபெயர்ப்புகள் மூலமாகவே அறிவியல் மற்றும் சிந்தனை மாற்றம் ஏற்படுவதுடன் நாடுகளுக்கு இடையே மறுமலர்ச்சியினை உண்டாக்கவும் முடியும்."* (Ibnu Kaltoon,1377H pp 44)

மேலும் ஜாஹிஸ் குறிப்பிடும்போது "மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழி மாற்றத்தை நகர்த்துவதும் நாடுகள் மற்றும் சமூகங்களுடைய புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழிமுறையாகும்." (Al Jahiz, (Arabic),p 87*)* *மேலும் ஜெர்மனியே பிரசித்தி பெற்ற அறிஞரும் ஒப்பீட்டு இலக்கிய முன்னணி ஆளுமையுமான கோத்தே குறிப்பிடும்போது "மானிட சமூகங்கள் பயன்படுத்தும் மொழிகளில் பல வேறுபாடுகள் இருந்த போதிலும், மக்களை ஒன்றிணைப்பதற்கும் மானிட வாழ்வியல் அம்சங்களை பிரதிபலிக்கும் இலக்கியங்களை இணைப்பதற்கும் சிறந்த ஒரு உபாதையாக மொழிபெயர்ப்பு விளங்குகிறது,"* (Goethe, 1936, Conversation with Ackermann) *என குறிப்பிடுகின்றார்.*

மேற்படி அறிஞர்களின் கருத்துகளை அவதானிக்கும் போது மொழிபெயர்ப்பு துறையானது, சமூக ஒற்றுமைக்கும் அதன் இணைப்புக்கும் பிரதான பாலமாக அமைகிறது என்பதை நாம் எளிதாக புரிந்து கொள்ளலாம். உண்மையில் மொழிபெயர்ப்பு அறிவியல், விஞ்ஞானம், மருத்துவம், மானிட சமூகவியல், மற்றும் பல்வேறு துறைகளுடன் சார்ந்த அறிவியல் புதுசங்களையும் கலாச்சார அம்சங்களையும் அறிந்து கொள்ளவும் பெரும் உறுதுணையாக அமைகிறது. மனிதன் சமூக களத்தில் சராசரியாகவும் சமநிலை பண்புடன் பணியாற்றவும் தீவிர இனத்துவ சிந்தனைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கும் இந்த மொழிபெயர்ப்பு துணையாக அமைகின்றன. இலக்கிய மொழிபெயர்ப்புகள் கலாச்சாரங்களையும் மொழிகளின் அழகுணர்வையும் வெளிக்காட்டுவதற்கு சிறந்த ஊடகமாக அமைகிறது என்பது மொழியிலாளர்களின் கருத்தாகும்.

இந்த வரைவிலக்கணங்களின் ஊடாக நாம் விளங்கிக் கொள்வது என்னவெனில் மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு சொற்களை மாற்றுவது மட்டுமல்ல, அது புதிய சூழலின் கருத்தை மீண்டும் உருவாக்குவதன் மூலம் ஆழமான புரிதலில் செயல்முறை என்பதை மேலுள்ள அறிஞர்களின் கூற்றுகளில் இருந்து நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

2. அறபு பாரசீக மொழிபெயர்ப்புகள்

பாரசீகர்களிடம் நாவல்களை அரபு மொழிக்கு மொழிபெயர்க்கும் பணியானது, ஆரம்ப காலத்திலிருந்து இடம்பெற்று வந்துள்ளன. குறிப்பாக அப்பாசிய ஆட்சிக்காலப் பகுதியில் (கி.பி 750 -1258) ஈராக் நாட்டின் பக்தாத் தலைநகரில் அறிவியல் முன்னெடுப்புகள் மேலோங்கி காணப்பட்ட காலப்பகுதியில் மொழிபெயர்ப்புத் துறையும் தனியான ஒரு கலையாகவும் அதற்கென தனியான ஏற்பாடுகளும் அப்பாசியக் கால அறிஞர்கள், கலீபாக்களினால் தயார்படுத்தப்பட்டன. மொழிபெயர்ப்புத்துறை வளர்ச்சியடைவதற்கு பாரசீகர்களின் பங்களிப்பு பிரதானமாக காணப்பட்டதுடன் பாரசீக தேசமாக விளங்கிய ஈரான், உஸ்பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் இந்தத் துறை வேகமாக வளர்ச்சி அடைந்தன. அரபு மொழியில் காணப்பட்ட நூல்கள் பாரசீக மொழிக்கும், பாரசீக மொழியில் காணப்பட்ட நூல்கள் அரபு மொழிக்கும் இக்கால பகுதியில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்டன. "அப்பாசிய ஆட்சிக்காலப்பகுதியில் பாரசீகத்தைச் சேர்ந்த அப்துல்லாஹ் இப்னு முகப்பஃ என்பவர் பாரசீகத்தின் சமூக பாரம்பரியங்களை உள்ளடக்கிய கதைகளை "கலீலா வதின்னா" என்ற நூலை

அதே பேரிலேயே அரபு மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தார். அப்போது வாழ்ந்த கலீபாக்களும் மொழிபெயர்ப்புத் துறையை வளர்ச்சி அடைய செய்வதில் அதிக பங்களிப்புகளை செய்தார்கள்".(அவுரன்க் சைபுல் அஃலமி 1997, தாரிக் ஹரகத் அத்தர்ஜூமா பில் அஜ்ரி அல் அப்பாஸி"ப.97) மொழிபெயர்ப்புத் துறை வளர்ச்சி அடைய செய்வதிலும் அதனை உலகலாவிய ரீதியில் பரவலாக்குவதிலும் பாரசீகர்ளுக்கு பாரிய பங்கு இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

"மொழிபெயர்ப்பு மற்றும் அறபுமயமாக்களுக்கு வலுவாக ஆதரவளிப்பதில் கலீபா மஃமூன் பிரபலமானவராக விளங்கினார். இந்த நோக்கத்தை அடையும் வகையில் அவர் பைத்துல் ஹிக்மா எனும் இல்லத்தை பக்தாதில் நிறுவினார். இவ்வில்லம் அக்கால பகுதியில் மொழிபெயர்ப்பு மற்றும் அறபு மயமாக்களின் பிரபல்யம் பெற்ற ஒரு கல்வி நிறுவனமாக விளங்கியது".(ஜுர்ஜா ஸைதான் பக் 117)

பொதுவாக நோக்குமிடத்து, பாரசீக, அறபு இலக்கியங்கள் உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்றவை என்பதுடன் பாரசீக நூல்களில் ஷாஹ்நாமா, கலீலா வதிம்னா, மற்றும் அல்மஸ்னவி போன்ற உலகப் புகழ் பெற்ற நூல்களும் அறபு நூல்களில் , அல்ப் லைல் வலைலா லைலா(Arabian Nights), *மஜ்னுன், ரிசாலத்துல் குப்ரான் போன்ற மத்திய காலப்பகுதியில் எழுதப்பட்ட அறபு நாவல்களும் உலகளாவிய ரீதியில் குறிப்பாக மேற்கு நாடுகளிலும் கீழைத்தேய இலக்கியங்களிலும் மிகுந்த செல்வாக்கினையும் தாக்கத்தையும் ஏற்படுத்திய சிறந்த இலக்கியங்களாகும். அதேபோன்று அறிஞர்களான புகாரி, திர்மிதி, இப்னு சீனா, ஜாஹிஸ், குவாரிஸ்மி , உமர் கையாம், அப்துல்லாஹ் பின் முகப்பாஹ், அபூ நவாஸ், அப்துல் காஹிர் ஜூர்ஜானி, பஷார் பின் பூர்த், இன்னும் பல அறிஞர்களையும் இலக்கிய மேதைகளையும் உருவாக்கிய நாகரிக தேசமாக பாரசீகம் விளங்குகிறது. இவர்களால் எழுதப்பட்ட ஆக்கங்கள் பரஸ்பரம் அறபு -பாரசீக மொழிகளுக்கும் ஏனைய உலக மொழிகளுக்கும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.*

பாரசீக நாகரிகத்தில் கிறிஸ்துவுக்கு முன்னரும் பின்னரும் உள்ள வரலாற்று காலப்பகுதிகளில் இலக்கியம் மிகச் சிறப்புற்று காணப்பட்டன. கலாச்சார பாரம்பரியங்களையும் மரபுககளையும் அதிகமாக விரும்பிய பாரசீக சமூகம், ஏனையவருக்கு அவற்றை இலக்கியங்களின் மூலம் அறிமுகம் செய்தனர். ஏனையவருக்கு தமது கலாச்சார மரபுகளை பாரசீகர் அறிமுகப்படுத்த முனைந்தபோது அவர்களுக்கு மொழிபெயர்ப்புச் செயல்பாடுகள் பேருதவியாக அமைந்தன. அதிலும் குறிப்பாக பாரசீகர்கள் தமது முதுசங்களை சமய ரீதியல் ஒன்றுபடும் அறபுகளுக்குத்தான் மொழிபெயர்ப்பின் ஊடாக முதலில் அறிமுகம் செய்தனர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த வகையில், பாரசீகர், இலக்கியங்கள் உட்பட அறிவியல், அழகியல், விஞ்ஞானம் போன்ற துறைகள் சார்ந்த அறிவியல் முதுசங்களை அறபு மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்தனர். கிரேக்க, உரோம நாகரிகங்களை ஒத்த அல்லது அதனை விட உயர்ந்த நாகரீகத்தையும் பெருமானங்களையும் கொண்ட பாரசீகர்கள், எல்லா துறைகளிலும் மேற்கு மற்றும் கீழைத்தேய நாடுகளை விடவும் முன்னணியில் விளங்கினர். இதனை அமீர் சகிப் அர்ஸலான் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிடும்போது "பாரசீக பேரரசும் அதன் நாகரீகங்களும் பல வருடங்கள் நீடித்து

காணப்பட்டன. புராதன நாகரிகங்களில் மிகப் பழமையான ஒரு நாகரிகமாக பாரசீகம் விளங்குகிறது. பண்டைய பாரசீகர்கள் அறிவு, பண்பாடு, கலாச்சாரம், இராணுவ பலம் என்பவற்றில் மிக உயர்ந்த கட்டமைப்புடனும் மிக உயர்ந்த நிலையிலும் காணப்பட்டனர். குறிப்பாக பெரும் மறுமலர்ச்சி காலப்பகுதிகளான இக்மீனிய மற்றும் சாசானிய ஆட்சிக் காலப்பகுதிகளில் அறிவியல், நிர்வாக, இராணுவ மற்றும் அனைத்து துறைகளிலும் மிக உயர்ந்த நிலையில் பாரசீகர்கள் காணப்பட்டனர். எனினும் பின்னர் அப்பேரரசு உள்நாட்டு வெளிநாட்டு சதிகளின் காரணமாக வீழ்ச்சி அடைய தொடங்கின." (Amir Shakib Arslan, 2009 P.194) *இவ்வாறு வரலாற்று தொடக்க காலத்தில் இருந்து நவீன காலம் வரை ஒவ்வொரு காலப்பகுதியிலும் மொழிபெயர்ப்புப் பணிகள் காணப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக பாரசீகத்திலுள்ள நாவல்கள், அறபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. நவீன காலப்பகுதியில் இத்தகைய நாவல்களை அரபு மொழிக்கு மொழிபெயர்க்கும் பணிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.*

3. மஹ்மூத் தௌலத் ஆபாதியின் "தரீக் அல் தப்ஹ்" என்ற நாவல் பற்றிய மதிப்பீடு

தௌலத் ஆபாதியின் "தரீக் அல் தப்ஹ்" (கொலைக்களம்) என்ற நாவல் பாரசீக சமூகத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு நாவலாக கருதப்படுகிறது. இந்த நாவல் ஈரான் - ஈராக் ஆகிய நாடுகளுக்கு இடையே இடம்பெற்ற எட்டு வருட யுத்தத்தினையும் போரின் மனித, பௌதீக ரீதியான பேரழிவையும் யுத்த அவலத்தையும் சித்தரிக்கின்ற ஒரு நாவலாகும். நூவலாசிரியர் நேரடியாக யுத்தத்தின் கோரத்தை உணர்ந்தவர், என்ற வகையில் அவர் அனுபவித்து துயர் நிலையை விளக்குவதுடன் அடுத்தவர்களின் உணர்வலையையும் தட்டியெழுப்பும் வகையில் நாவலின் விடய உள்ளடக்கம், வாக்கிய கட்டமைப்பு என்பவற்றின் ஊடாக அழுகுற சொற்கள், வாசகங்களுடன் வாசிப்போரின் மனதை கொள்ளை கொள்ளும் விதத்தில் கட்டமைத்திருப்பது இந்த நாவலின் சிறப்பம்சமாகும். அத்துடன் இந்த நாவல் அறபு மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்த மொரோக்கோவைச் சேர்ந்த கலாநிதி அஹமத் மூஸாவும் அதனை அறபு மொழியில் சுவைபடவும் உணர்வுகளை தூண்டும் வகையிலும் இந்த நாவலை மொழிபெயர்ப்பாக கொண்டு வந்திருப்பது சிறப்பித்துக் கூறப்பட வேண்டியதாகும். இந்த யுத்தம் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மனித உயிர் சேதங்களையும் பொருளாதார அடிப்படை கட்டமைப்புக்களின் இழப்புகளையும் கொண்ட கோர யுத்ததமாகவும் விளங்குகிறது. (அல்அய்யாம், பக் 11)

இந்த நாவலை எழுதிய மஹ்மூத் தௌலத் ஆபாதி 1940 களில் ஈரானில் கல்விப் பராம்பரியக் குடும்பப் பின்னணியைக் கொண்ட பிறந்த ஒரு சிறந்த நாவல் ஆசிரியராகவும், எழுத்தளாராகவும் இருந்த இவர், சமூக ஈடுபாடுகளை முன்னோடியாகவும் விளங்கினார். இவர் சமூக, பொருளாதார, அரசியல், போன்ற துறைகளில் ஆர்வம் கொண்டவர், எழுத்து துறையில் தனியான வலிமையான நடைகளையும் அனைவரும் விரும்பக் கூடிய வகையில் கவர்ச்சியாகவும் செரிவாகவும் கருத்துக்களை முன்வைக்க கூடிய வலிமைகொண்டவராக விளங்குகிறார். 'கொலைக்களம்' என்ற நாமத்தில் எழுதப்பட்டுள்ள இந்த நாவல் நேரடியாக மனித படுகொலைகளை மாத்திரம் சுட்டிக்காட்டாமல் யுத்தத்தின் பெறுபேறாக அமையும் வறுமை, ஒடுக்குமுறை, உளவியல் தாக்கம், தனிமை, பயம் போன்ற கருத்தியல்களையும் முன்வைப்பதாக அமைந்துள்ளது. படுகொலை என்பது உடலுடன் சார்ந்த விடயம் மாத்திரம் இன்றி அது அவமரியாதை, சுதந்திரமின்மை,

வன்முறை, அழிவு போன்ற விடயங்களையும் குறித்து காட்டுகிறது என்பதை இந்த நாவல் முன்வைக்கிறது. அத்துடன் உலகலாவிய ரீதியல் ஈரான் - ஈராக் யுத்ததம் தொடர்பான தகவல்களை இலக்கிய சாயலுடன் மக்களுக்கு முன்வைத்த முக்கிய நாவல்களில் ஒன்றாக இது மதிக்கப்படுகிறது.

இந்த நாவலை மொத்தமாக நோக்கும் போது, ஈரானில் இஸ்லாமிய குடியரசு ஒன்று உருவாகி அதன் பினனர் அங்கு ஏற்பட்ட அரசியல் மற்றும் சிந்தனை மாற்றங்களின் ஒரு முக்கிய கட்டத்தின் பிரதிபலிப்பை பறைசாட்டும் ஒன்றாகவே இந்நாவல் அமைகிறது எனலாம்.

இந்த நாவலானது பின்வரும் முக்கிய அம்சங்களை கருப்பொருளாகக் கொண்டுள்ளது. அவை வருமாறு:

I. ***வன்முறை மற்றும அடக்கியாள்தல்***: *யுத்த சூழலில் வன்முறை பல மட்டங்களில் இடம்பெறுவது இந்த நாவலில் சித்தரிக்கப்படுகிறது. வன்முறை, அடக்கியாளுதல் என்பது கண்ணியம், சுதந்திரம், தனிநபருக்கு துவம்சம் இழைத்தல்; போன்ற கருத்தியல்களை இது சுமந்து வருகிறது.*

II. ***யுத்தப் பேரழிவால் ஒதுக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுகின்ற மானிட சமூக நிலை பற்றிய சித்தரிப்பு:*** *இந்த நாவல் தனிமைப்படுத்த மனித சமூகத்தின் உடலியல் மற்றும் உளவியல் சார் நிலைகளை கதாபாத்திரங்களின் பங்கேற்புடன் தெளிவாக முன்வைக்கிறது. யுத்தத்தால் உருவாகும் உடலியல் மற்றும் பௌதீக ரீதியான பாதிப்புக்களைக் காட்டிலும், உளவியல் ரீதியல் பாதிக்கப்பட்ட மனிதனுக்கான சிகிச்சையளித்தல் என்பது இலகுவான காரியமன்று, ஆன்மீகமும் கருதத்தியல் சார் அணுகுமுறையும் பயிற்றப்பட்ட மனித வளங்களால் இவை பூரணப்படுத்தப்படுவதும் இன்றியமையாத தேவை என்பதை இந்த நாவல் உணர்த்துகிறது.*

III. ***இறை நியதியையும் விதியையும் புரிந்து அவற்றுக்கு மதிப்பளித்தல்:*** *பல்வேறு இழப்புகளை சந்திக்கும் மனிதனை ஆற்றுப்படுத்துவதும் திருப்தியுடன்; ஓரளவேனும் மனிதன் சோதனைகள் நிறைந்த உலகில் வாழ்வதற்கான உத்வேகத்தை வழங்குவதற்கான பாதையாக விதியை விசுவாசித்தல் என்ற அம்சத்தை நாவலாசிரியர் கொண்டு வந்திருப்பது சிலாகித்துக் கூறவேண்டியதாகும்.*

IV. ***சமூக யதார்த்த நிலையின் வெளிப்பாடு***: *யுத்த சூழலில் மானிட சமூகம் கண்ணியத்தை இழந்து மானிட அடிப்படைத் தேவைகள் கூட பூரணப்படுத்தப்படாத நிலை தோன்றலாம். இவை யுத்தம் இடமபெறும் தேசங்களில் தோன்றும் சாதாரண யதார்த்த நிலை என்பதை மனிதன் தெரிந்துகொள்ளத் தவறுகின்ற போதே விரக்தியின் நிலையை அடைகிறான் என்பதை இந்த நாவலில் முன்வைக்கப்படுகிறது.*

V. ***உளவியல் பாதிப்பு:*** *யுத்த சூழலில் பௌதீக அழிவுகளைக் காட்டிலும் உளவியல் ரீதியான பின்னடைவு, பாதிப்பு மிகவும் சிக்கலானதொரு விடயமாக இந்நாவலில் சித்தரிக்கப்படுகிறது. உளவியல் சார் வடுயை பூரணப்படுத்த பல தசாப்தங்களை வேண்டி நிற்கும் ஓர் அவல நிலையாகும். இவ்வாறான முக்கிய கருப்பொருளை உள்ளடக்கிய வகையில் இந்த நாவல் அமைந்துள்ளது. முழுக்க சமூக வெளிப்பாட்டின் அடையாளமாகவும் இந்த நாவல் விளங்குகிறது.*

4. பாரசீக மொழியில் எழுதப்பட்ட தௌலத் ஆபாதியின் நாவலின் போக்குகளும் அவற்றில் கையாளப்பட்டுள்ள நுட்பங்களும்:

நவீன இருபத்தோராம் நூற்றாண்டில் துறை சார்ந்த ரீதியல் பல்வேறு மாற்றங்கள், உலகளாவிய ரீதியில் ஏற்பட்டது போல பாரசீக நாவல்களிலும் பல மாற்றங்கள் இடம்பெற்றன. இந்த மாற்றம் நவீன போக்குகளை உள்ளடக்கியதாகவும்; பாரசீக நாகரிகத்தின் முதுசங்களை உள்வாங்கிய விதத்திலும் காணப்பட்டமை இம்மாற்றங்களின் சிறப்பம்சமாகும். பாரசீக நாவல்கள் சமூக, பொருளாதார, கலாச்சார, அறிவியல் மற்றும் அரசியல் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் அமைய பெற்றிருப்பதுடன் பல்வேறு நுட்பங்களையும் கொண்டு காணப்படுகிறன. அத்துடன் பாரசீக நாகரீகம், சமய ரீதியாக நோக்கும் போது இஸ்லாமிய மார்க்கத்துடன் அது சங்கமித்ததை தொடர்ந்து அதன் சிந்தனைப் போக்குகளில் அமைப்பியல் மற்றும் கருத்தியல்சார் மாற்றங்களுக்கு உள்ளாகி அதன் பெறுமானங்களையும் உள்வாங்கிய வகையில் அமைதமை குறிப்பிடத்தக்கதாகும். சிந்தனை கருத்தியல்களை உருவாக்கிய வகையில், பாரசீக நாவல்கள், அதிலும் குறிப்பாக தௌலத் ஆபாதியின் "தரீக் அத்தப்ஹ்" என்ற நாவல் எந்தளவு செல்வாக்குப்பெற்றுள்ளன என்பதை பின்வரும் குறிப்புகளில் மூலம் நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

i. ***சமூக யதார்த்தங்களையும் கருத்தியல்களையும் பிரதிபலித்தல்***: *பாரசீக நாவல்களில் அநேகமானவை சமூக கருத்தியல்கள், சிந்தனைகள், வாழ்வியல் அம்சங்கள் அநியாயங்களையும் வன்முறைகளையும் எதிர்த்தல், சமூக பிரச்சனைகளை எடுத்துக்காட்டுதல் போன்ற விடயங்களை உள்ளிட்டதாக காணப்படும். "தௌலத் ஆபாதியின் நாவலானது, இன்றைய காலப்பகுதியில் கிராமங்களில் வேலை வாய்ப்பு சமூகம் சந்திக்கும் பல்வேறு வேதனைகள், தற்போது கிராமங்களில் இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்களை நாவல் வடிவங்களில் முன்வைக்கின்றன. (தௌலத் ஆபாதி, பக். 78)*

ii. ***பாரசீக கலாச்சார பாரம்பரியங்களையும் விமர்சனங்களையும் உள்வாங்கிய ரீதியில் அமையப்பெறல்:*** *பாரசீக கலாச்சாரம், மரபுகளை முன்னிலைப்படுத்தியும் அவற்றை சமூக சர்வதேச ரீதியில் அறிமுகப்படுத்தும் வகையிலும் இந்த நாவல்கள் காணப்படுகின்றன. இந்த வகையில் ஸிமன் டிரான்ஸ்பர் என்ற பிரசித்தி பெற்ற ஈரானிய பெண் நாவலாசிரியர், குடும்ப வாழ்வு, பெண்களின் பங்குபற்றுதல், அவர்களுக்கான குடும்ப கட்டுப்பாடுகள், அவர்களுடைய காணப்படும் மரபு நிலை, பாரசீக மற்றும் இஸ்லாமிய பாரம்பரியங்கள் இடையிலான தொடர்பு பற்றி 2012இல் பல ஆக்கங்களாகவும் நாவல்கள் வடிவிலும் எழுதி வெளியிட்டுள்ளதுடன் அதே போல கிராமப்புற வாழ்வு, பழக்கவழக்கங்கள், பழங்குடி மக்களின் வாழ்வியல் தொடர்பாகவும் 1940களில் பல நாவல்களை எழுதி உள்ளவை குறிப்பிடத்தக்கதாகும்.*

iii. ***அரசியல் சார் கருத்தியல்களை மையப்படுத்தியுள்ளமை***: *பாரசீக நாவல்களில் அநேகமானவை அரசியலை விமர்சித்தல், ஒப்பிடுதல், நீதியான அரசியலை நோக்கி எழுதுதல், அரசியல் வரலாறு, நீதியான தலைமைகளை புகழுதல் அநீதிகளை கண்டித்தல் என்பவற்றை மையப்படுத்திய வகையில் பல நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக இஸ்லாமிய*

புரட்சி இடம் பெற்றதன் பின்னர் ஈரானில் நீதியான அரசியலை தூண்டும் வகையிலான நாவல்கள் பல வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் நாவலாசியர்களான இப்ராஹீம் கொலஸ்தான், சாதிக் ஹிதாயத் போன்றோர்கள் இத்தகைய நாவல்களை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பாரசீக நாவல்களை பொறுத்தவரையில் ஏனைய நாவல் அமைப்புகளிலிருந்து வேறுபடும் வகையில் பல்வேறு நுட்பங்களையும் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளன.

இத்தகைய நவீன பாரசீக நவீன நாவல்களிலும் குறிப்பாக தௌலத் ஆபாதியின் நாவலில் பயன்படுத்தப்பட்டுள்ள நுட்பங்களை பின்வருமாறு நாம் நோக்கலாம்.

1) ***எளிமையான நடைகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை**: நவீன காலத்தில் எழுதப்பட்ட பாரசீக நாவல்களிலும் அதன் அறபு மொழிபெயர்ப்புக்கள் உட்பட பெரும்பாலான நாவல்களில் எளிதில் அனைவரும் புரிந்து வகையில் எளிமையான நடைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாவல்களை சமூக மயப்படுத்தும் வகையிலும் அனைவரும் வாசித்து விளங்கக்கூடிய முறையிலும் எளிய நடைமுறையில் இலகுவான சொற்பிரயோகங்களை கொண்டு எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "பாரசீக நாவல்களைப் பொருத்தவரையில் அவை எளிமையும் இலகுவான முறையிலும் அனைத்து மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் நாவலாசிரியர்கள் எழுதியுள்ளனர். இவற்றுக்கு உதாரணமாக நாவலாசியர்களான சாதிக் மற்றும் தௌலத் ஆபாதி போன்றோர்கள் எழுதிய நாவல்களைக் குறிப்பிடலாம்";. (அஹ்மத் அலி . 2000, அல் அய்யாம்; நாளிதழ் பக். 10)*
2) ***உளவியல் சார்ந்த எழுத்து முறைப்பயன்பாடு**: பாரசீக நாவல்களில் பெரும்பாலான நாவல்களை நோக்கும் போது, அவை சமூக உணர்வுகளை பிரதிபலிப்பதாகவும், சமூக உள்ளுணர்வு, மன அழுத்தம், தனிமை, பயம், யுத்த சூழல், இடப்பெயர்வு, மனித நேயம் போன்ற பல்வேறு கருத்தியல்களை பிரதிபலிப்பதாகவும் தனிமனித மற்றும் சமூக வலிமையை மெருகூற்றும் வகையிலும் நாவல்கள் எழுதப்பட்டுள்ளது. இத்தகைய நாவல்கள் மக்களின் கருத்துக்களை முன்மொழிவதுடன் உளவியலை பிரதிபலிப்பதாகவும் அவர்களுக்கு மனவலிமையை பலப்படுத்தி, வழிகாட்டல்களை முன்வைப்பதாகவும் அமைந்துள்ளன. "உண்மையில் ஆபாதியின் இத்தகைய நாவலூடன கருத்தியல் சார் அணுகுமுறை மக்களின் உளவியல் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைந்துள்ளதுடன் நவீன காலத்தில் பாரசீக மொழியில்; எழுதப்பட்ட பெரும்பாலான நாவல்களில் காணப்படுவது இங்கு சிலாகித்துக் கூறப்படவேண்டியதாகும";. (ஷக்ரி அஸீஸி, 2008, அன்மாத் அர்ரிவயா அல் அறபிய்யா அல்ஜதீதா" பக் 37) நாவலாசிரியர் சாதிக் ஹிதாயத் என்பவரால் எழுதப்பட்ட நாவல்களில் இதனைக் காணலாம்.*
3) ***பன்முக நோக்குகளைக் கொண்டவை**: பாரசீக நாவல்களின் சிறப்பம்சம் யாதெனில், ஒரு கருத்தியலை பல்வேறு கோணங்களில் அணுகி இலகுவான நடையிலும் அனைவரும் விளங்கும் விதத்திலும் அவற்றை முன்வைப்பதாகும்." பாரசீகத்திலிருந்து அறபுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நாவல்களிலும் இத்தகைய சிறப்பம்சங்கள் ஒரே வடிவில் பிரதிபலிப்பதை அவதானிக்கமுடிகிறது, இது இரு மொழிகளுக்குமிடையே காணப்படும்*

நெருக்கம் ஒற்றுமை என்பவற்றின் வெளிப்பாடாகவே கொள்ளமுடியும்'' (அலி ரிஷா ஷெய்கி, 2017, அல் அதபு அல் முகாரன்(அறபு), பக்-53) இதன் மூலம் பல்வேறு பல்வேறு அறிவியல் மற்றும் உளவியல் பக்கங்களையும் சரியான புரிதல்களையும் விளங்கிக் கொள்வதற்கு உறுதுணையாக அமையும்.

4) ***பாரசீக பாரம்பரியங்களையும் மற்றும் நவீனத்துவத்தையும் உள்ளடக்கிய வகையில் காணப்படல்**: பாரசீக நாவல்களில் காணப்படுகின்ற சிறப்பம்சம் யாதெனில், பாரசீக கலாச்சாரங்களையும் பாரம்பரியங்களையும் முன்வைப்பதுடன் அவற்றை நவீனத்துவத்தோடு; இணைந்த விதத்தில் கொண்டுவருவதாகும். "நவீன சிந்தனைகள் மற்றும் அதன் கருத்தியல்களில் காணப்படுகின்ற பிரச்சனைகள் அவற்றை நோக்கிய விமர்சனப் பார்வை, பாரசீக பாரம்பரியங்களை ஒப்பிடுதல் அவற்றுக்கிடையிலான இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை வெளிக் கொண்டு வருதல் போன்றன இந்நாவல்களில் காணப்படுகின்றன".(அலி ரிஷா ஷெய்கி, பக் 37).*

5. *மஹ்மூத் தௌலத்தின் நாவல் சமூக மட்டத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்:*

'தரீக் அத்தப்ஹ்' (கொலைக்களம்) என்ற இந்த நாவல் ஈரானிலும் சர்வதேச மட்டத்திலும் குறிப்பாக அறபு வாசகர்கள் மத்தியிலே மிகுந்த தாக்குங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக சாதாரண சமூக மட்டத்திலிருந்து உயர்ந்த சமூகம் மட்டும் வரை இந்த நாவல் ஏற்படுத்தியுள்ள தாக்கமானது மிகப்பெரியதாகும். இந்த நாவலை வாசித்த அறபு சமூகத்தின் நூற்றுக்கு மேற்பட்டவர்களின் கருத்துக்களையும் பின்னூட்டல்களையும் அவதானிக்கும் போது இதனை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இந்த நாவல் அறபு மற்றும் ஏனைய சமூகங்களிடையே அமைப்பியல் மற்றும் கருத்தியல் ரீதியான மாற்றங்களில் மகுந்த செல்வாக்குச் செலுத்தியிருப்பதைக் காணலாம்.

இந்நாவல் ஏற்படுத்திய தாக்கங்களைப் பொருத்தவரையில் அவை அறிவியல், அரசியல், சமூகவியல், கலாச்சார பண்பாட்டியல் போன்ற பல்வேறு மட்டங்களில் செல்வாக்கினை செலுத்தியிருப்பதைக் காணலாம். அறிவியலைப் நோக்கும் போது, இன்று ஈரானிய மற்றும் அல்ஜீரிய பல்கலைகழகங்களில் நாவல் திறனாய்வுகளில் கற்பிக்கப்படுகின்றன. அதிலும் சர்வதேச ரீதியாக செல்வாக்கினை ஏற்படுத்திய நாவல் என்ற வகையில், இது ஒப்பீட்டு இலக்கியத்தில் இந்நாவலின் பிற இலக்கியங்கள் மீதான தாக்ககங்கள் என்ற வகையிலும் கற்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் ஆய்வு நடவடிக்கைகளிலும் பாரசீக மொழி அமுலிலுள்ள பாடசாலைகளிலும் இந்த நாவல் கூடுதலாக மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. அரசியல் ஆர்வலகளிடத்திலேயும் பெரும் செல்வாக்கினைப் பெற்றுள்ளது. இந்த நாவல் மனித நேயம், ஒற்றுமை, அநியாயத்திற்கெதிரான போராட்டம் போன்ற முக்கிய கருத்தியல்களை முன்வைப்பதால் அறபு சமூகத்திடம் குறிப்பாக ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அறபு மக்களிடம் இந்த நாவலுக்கு தனியான வரவேற்பு இருப்பது அவதானிக்கத்தக்கதாகும். ''தௌலத் ஆபாதியின் ''தரீக் அத்தப்ஹ்'' என்ற நாவல் அளவில் சிறியதாக இருந்த போதிலும், சமூக, அரசியல் மற்றும் கல்வியலாளர்களிடையே மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற நாவல்களே

இன்றயை சமூகத்திற்கு அதிகார அரசியல் வர்க்கத்தின் ஒடுக்குமுறையிலிருந்து எழுச்சியின் வாயலை திறப்பதற்கு மிகவும் இன்றியமையாதது" என ஈராக்கிய நாவலிலக்கிய முன்னோடி ஹுசைன் அல் மக்தூஸி குறிப்பிடுகிறார். (அல் மதா பத்திரிகை, ஈராக், ஜனவரி 2022 பக். 4).

இந்த நாவல் அறபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டதனால் அறபு மக்களிடையே பாரசீக நாவல்கள் பற்றி சரியான புரிதலையும் அதன் கருத்தியல்களையும் சாதாரனமாக அனைவரும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. பாரசீக கலாச்சாரத்தின் அடர்த்தியான செறிவாக்கத்திற்கும் மக்களிடையே செல்வாக்கு பெறுவதற்கும் இந்த நாவல் காரணமாக அமைந்தது. இவ்வாறு எல்லா வகையிலும் பல்வேறு மட்டங்களிலும் அதிக செல்வாக்கினை ஏற்படுத்திய முக்கிய நாவலாக இது விளங்குகிறது என்பது மிiயானது அல்ல.

முடிவுரை:

நவீன 21ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முக்கிய பாரசீக நாவல்களில் என்றாக தௌலத் ஆபாதியின் ' தரீக் அத்தப்ஹ்' என்ற நாவல் கருதப்படுகிறது. இந்த நாவல் உரைநடை இலக்கிய பாரசீக வரலாற்றில் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்திய முக்கிய ஒன்றாகும். இந்த நாவலின் மொழி நடை, போக்கு, கருத்தியல், எளிமையான வசனங்கள் என்பன சாதாரன மக்களின் ஒப்புதலையும் வரவேற்பையும் பெறக் காரணமாக அமைந்தது. இந்த நாவல் அறபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டதன் விளைவாக அறபு வாசகர்களிடையேயும் சிந்தனை, கலாச்சார ரீதியாக மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. மன்னராட்சி என்ற பெயரால் அறபுலகத்தில் ஒடுக்குமறைக்கு உட்பட்ட மக்களுக்கு நிவாரணமாகவும் ஆத்மானந்தமாகவும் அமைந்ததுடன் புதிய கோணத்தில் சிந்திபதற்கான பாதையை அமைத்து எனலாம். இந்த நாவல் ஏற்படுத்திய தாக்கம் அறபு பாரசீக மக்களிடத்தல் அளப்பெரியதாகும். துற்போதைய சூழலில் இந்நாவல் பல மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உசாத்துணை:

- Abadi, T. (2010), *Thareek aththabh (Arabic), Manshoorath arrabeeu*, Egypt.
- Abadi. T. (2012), *Kullun nafseen feewathnihi,* (Translated to Arabic by Mohammed Hasan Kabeesi) Dar al Mada Publication, Beirut.
- Alireza, s. (2017), Al Athabul Mukaran, Imam Khomeini Univesity Press, Tehran, Iran.
- Ali Mohammed. (1990), Al Ayyam (Newspaper), Published in Cairo, Egypt.
- Amir Shakib Arslan, 2009, Why did Muslims fall behind and why did others progress? Hindawi Foundation for the Dissemination of Knowledge and Culture, a non-profit organization
- Aurank, S.A, (1997), Thareek Harakath vaththarjuma fil asril abbasi, Dar al kuthb, Beirut.
- Jahiz. A.U. (1949), Albayan wath thabyeen (Arabic), Val.1, Mathbau Lajnathul al Thahleef wath tharjumah Wannashr, Cairo.

- Ibnu Kaltoon A.R, (H1377), Al- Muqattima Ibnu Kaltoon (Arabic), Dar Kuthb al Ilmiyyah, Beirut,
- Gandhi Mahatma, (2005), All men are Brothers? published by A&C Black press.
- Goethe, (1823-1832), Conversation with Eckermann, Wallge wood LL. D, University New York.
- Newmark, 1988, A text book of Translation, New York, prentice Hall p-7)
- Nasr.M.(2018), Jusoor ath tharjumah bainal Arabiyyah wal farisiyyah fil asri al Hathees, Centre for civilizational studies, Beirut, Lebonon.
- Samuel P. Huntington (1996), The Clash of Civilizations and the Remaking of World Order, Simon & Schuster.
- Shadha, P. (2008), Al Athabul Farsi al Hatheesi fee Mirath al Arbiyyah, Dar Hilal, Cairo.
- Shukry.A. (2008), Anmath Arriwayah al arabiyyah al jatheetha, World Knowledge Publication, Kuwait.